# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

இரண்டாம் தவணைப் பரீட்சை- 2023

| தரம் :- 10 | சைவசமயம் I,II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

சரியான விடையின் கீழ் கோடிடுக

1. நாம் எக்காரியத்தையும் தொடங்கும் முன்னர் வழிபட வேண்டிய தெய்வம்.
   1.சிவபெருமான் 2.முருகன் 3.மகாவிஷ்ணு 4.பிள்ளையார்
2. ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி அவற்றுக்குப் பேரின்பத்தை கொடுத்தல்
   1.மறைத்தல் 2.படைத்தல் 3.அருளல் 5.அழித்தல்
3. அட்டபுஷ்பங்களில் அடங்கும் தொகுதி
   1.கொல்லாமை,இரக்கம், நன்றி 2..பொறுமை, இரக்கம், அன்பு
   3.அன்பு, ஐம்பொறியடக்கம், ஈகை 4. அறிவு, உண்மை, மதிப்பு
4. அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்'' என யாது கூறுகின்றது.
   1. பெரிய புராணம் 2. திருமந்திரம் 3. திருக்குறள் 4. திருவருள் பயன்
5. ஐப்பசி மாத அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் சஷ்டி வரை அனுட்டிக்கும் விரதம்
   1. விநாயக சஷ்டி 2. திருவெண்பாவை 3. திருவாதிரை 4. கந்தசஷ்டி
6. '' சுவாமி நான் இறக்கும் இத்தினத்தில் உன்னை அருச்சித்து வழிபடுவோருக்கு அருள்புரிய வேண்டும்'' என வரம் கேட்டவர்.
   1. நரகாசுரன் 2. கஜமுகசுரன் 3. சூரன் 4. மகிடாசுரன்
7. சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் நாள்
   1. தைப் பொங்கல் 2. ஆடிப்பிறப்பு
   3. சித்திரை வருடப்பிறப்பு 4. திருக்கார்த்திகை விளக்கீடு
8. சுந்தர மூர்த்தி நாயனார் இருகண்பார்வையையும் இழந்த இடம்
   1. திருவாரூர் 2. திருவொற்றியூர் 3. திருப்புன்கூர் 4. தில்லை
9. மௌனோற்சவம் எத்தொழிலை உணர்த்தி நிற்கின்றது.
   1. காத்தல் 2. அருளல் 3. மறைத்தல் 4. படைத்தல்
10. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பொற்றாளம் பெற்ற தலம் யாது?
    1. திருக்கோலக்கா 2. சிதம்பரம்
    3. திருப்பெண்ணாகடம் 4. கொடி மாடச்செங்குன்றூர்
11. திருநாவுக்கரசு நாயனார் உன்னுடைய சூல இடப இலச்சினைகளை எனக்கு இட்டருள வேண்டும் என்று விண்ணப்பித்து பாடிய பதிகம்
    1. மாசில் விணையும் 2. பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்
    3. பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ 4.. ஒன்று கொலாமவர் சிந்தை
12. சகலாகம பண்டிதர் என்னும் சிறப்பு பெயர் பெற்றவர்
    1. திருஞானசம்பந்தர் 2. மெய்கண்டதேவர் 3. அருணந்த சிவாச்சாரியார் 4. அருணகிரிநாதர்

13.ரிஷி என்ற சொல்லின் பொருள் யாது?

1. மகிழ்பவன் 2. நினைப்பவன் 3. மதிப்பவன் 4. காண்பவன்

14.சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை உருவகக் கதைவடிவில் எடுத்துரைப்பன.

1. ஆரணியங்கள் 2. மந்திரங்கள் 3. உபநிடதங்கள் 4. பிராமணங்கள்

15.திருமணக் கிரியையில் இல்லறம் சிறக்க வேண்டும் என்று யாரை வேண்டுவர்

1. சிவனை 2. அருந்ததியை 3. சந்திரனை 4.சூரியனை

16.தேவாசிரிய மண்டபம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது.

1. தில்லை 2. திருமருகல் 3. திருவாரூரில் 4. திருநாவலூரில்

17.திலகவதியார் தங்கியிருந்து திருத்தொண்டு புரிந்த இடம்

1. திருவதிகை 2. திருவாரூர் 3. திருப்புன்கூர் 4. சிதம்பரம்

18.சுவாமி விபுலாநந்தரின் இளமைப் பெயர் யாது?

1. மருணீக்கியார் 2. மயில்வாகனம் 3. முத்துலிங்கம் 4. சிவபாதசுந்தரம்

19.தியானத்திற்குரிய விடயங்களை உள்ளடக்கியதாகும் காண்டம்

1. கர்மகாண்டம் 2. யுத்தகாண்டம் 3. உபாசனா காண்டம் 4. ஞான காண்டம்

20.“ சத்திய மேவ ஜயதே” என வாய்மை பற்றி யாது கூறுகின்றது.

1. வேதம் 2. ஆகமம் 3. உபநிடதம் 4. தந்திரங்கள்

21.திருவருட்பயன் என்னும் நூலின் ஆசிரியர்

1. மெய்கண்டதேவன் 2.அருணகிரிநாதன்
3. அருணந்திசிவாச்சாரியார் 4. உமாபதி சிவாச்சாரியார்

22.பிரளயாகலர் எனப்படுவோர்.

1. ஆணவம், கன்மம், மாயை மூன்று மலங்களாலும் பீடிக்கப்பட்டவர்கள்
2. ஆணவம் கன்மம் இருமலத்தல் பீடிக்கப்பட்டவர்கள்
3. ஆணவமலத்தல் மாத்திரம் பீடிக்கப்பட்டவர்கள்
4. ஒரு மலத்தாலும் பீடிக்கப்படாதவர்கள்

23.சுவாமி விபுலாநந்தர் இயற்றிய இசை நூல்

1. யாழ் நூல் 2. மதங்கசூளாமணி 3. கொடிக்கவி 4. சிவஞான போதம்

24.படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில் ….” என யாது கூறுகிறது.

1. திருமந்திரம் 2. திருக்குறள் 3. உபநிடதம் 4. வேதம்

25.இறைவன் குணம் குறிகளுக்கு அப்பாற்பட்ட நிலை

1. தடத்த நிலை 2. உருவ நிலை 3. அருவுருவநிலை 4. சொரூபநிலை

26.பூர்வக் கிரியைகளுள் அடங்கும் தொகுதி

1. அன்னப்பிராசனம், திருமணம், சிரார்த்தம்
2. திருமணம், ஈமக்கிரியை, வித்தியாரம்பம்
3. அன்னப்பிராசனம், வித்தியாரம்பம், திருமணம்
4. மேற்கூறிய யாவும் சரி

27.மருணீக்கியார் எவ்விடத்தில் உள்ள சமணப்பள்ளியில் இணைந்து கொண்டார்.

1. திருவதிகை 2. பாடலிபுரம் 3. வீரட்டானேஸ்வரம் 4. திருவாமூர்

28.சிவமூர்த்தங்கள் எத்தனை?

1. 25 2. 28 3. 64 4. 65

29.உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலை இயற்றியவர்

1. மெய்கண்டதேவர் 2. மனவாசம் கடந்தார்
3. அருணந்திசிவாச்சாரியார் 4. உமாபதிச்சிவாச்சாரியார்

30.எண்ணை வைத்து கொண்டாடும் பண்டிகை

1. தைப்பொங்கல் 2. சித்திரைப்புத்தாண்டு 3. ஆடிப்பிறப்பு 4. தீபாவளி

31.அட்டமா சித்திகள் கைவரப்பெற்றோர்

1. யோகியர் 2. தியாகிகள் 3. கருக்கள் 4. நாயன்மார்கள்

32.சதசத்து என எதனை அழைப்பர்

1. பதி 2. பாசம் 3. பசு 4. ஆணவம்

33.“ஆரம்” கண்டிகை ஆடையும் கந்தையே …..” என்பதில் கண்டிகை என்பது.

1. விபூதி 2. உருத்திராக்கமாலை 3.பூமாலை 4. மாலை

34.நாட்கள் எதனை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றன.

1. கிரகங்கள் 2. நட்சத்திரங்கள் 3. இராசிகளை 4. கரணங்கள்

35.“இத்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்” எனக் கூறியவர்.

1. திருமூலர் 2. ஆறுமுகநாவலர் 3. சுவாமி விபுலாநந்தர் 4. திருஞான சம்பந்தர்

36.திருக்கழுமலம் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது.

1. கன்மம் 2. மாயை 3. பாசம் 4. ஆணவம்

37.இருள் மலம் என அழைக்கப்படுவது.

1. கன்மம் 2. மாயை 3. பாசம் 4. ஆணவம்

38 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு அட்டவணை A யில் இருந்து 1 வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடைதருக.

| | | |
|---|---|---|
| | யர் | ள்விடயம் |
| மிழாகமம் | ருணந்திசிவாச்சாரியர் | ன்றுதந்திரங்கள் |
| தங்கசூளாமணி | ருமூலர் | டக நூல் |
| ருபா இருப.ஂ.து | புலாநந்தர் | னாவிடை |

38.சாமித்தம்பி கண்ணம்மை தம்பதிகளின் தவப்புதல்வனுடன் தொடர்புடைய தொகுதி

1. AFH 2. BFH 3. CDG 4. BEH

39.பத்தாம் திருமுறையுடன் தொடர்புடைய தொகுதி.

1. AEI 2. BEG 3. AEG 4. CDH

40.சிவஞான சித்தியார் என்ற நூல் ஆசிரியருடன் தொடர்புடையது.

1. CDI 2. CFI 3. ADH 4. CDH

## பகுதி II

முதலாம், இரண்டாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

சுருக்கமான விடை தருக.

1. இறைவனின் எண்குணங்கள் நான்கினைத் தருக.
2. ஒப்பரவு என்றால் என்ன?
3. நவீனயுகத்தின் அரிச்சந்திரன் எனப்போற்றப்படுபவர்?
4. வேதங்களின் மூன்று காண்டங்களும் எவை?
5. திருநாவுக்கரசர் முதலில் பாடிய பதிகம்? ஈற்றில்பாடிய பதிகம் எது?
6. திருஞானசம்பந்தர் சமணர்களுடன் நிகழ்த்திய வாதங்கள் எவை? பாடிய பதிகங்களையும் தருக.
7. சுவாமி விபுலானந்தர் ஆசிரியராக திகழ்ந்த பத்திரிகைகள் யாவை?
8. மூவகை ஆன்மாக்களும் எவை?
9. ஒன்பதாம் திருமுறையில் அடங்குபவை யாவை?
10. திருவருட் பயனின் முதல் இரு அதிகாரங்களும் எவை?

(புள்ளி 10X2=20)

2) கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அதன் பொருளை தருக.

1. உற்றுமை சேர்வது
2. மீளா அடிமை
3. குனித்த புருவமும்
4. தந்தது உண்தன்னை கொண்டது என்தன்னை
5. கற்றவர் விழுங்கும். (புள்ளி 5x2=10)

3) ''மகோற்சவங்கள் ஊர் மக்களை ஒன்று சேர்க்கின்றன''

I. சிவமூர்த்தங்கள் நான்கினை தருக
II. நிந்திய கிரியையில் இடம்பெறும் ஆறுகாலப் பூசைகளையும் ஒழுங்கு முறையில் தருக.
III. மகோற்சவத்தில் ஐந்தொழிலின் தத்துவத்தை விளக்குக.

(புள்ளி 2+3+5=10)

4) ''இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்''

I. திருஞானசம்பந்தர் எங்கே எந்நாளில் அவதரித்தார்?
II. திருநாவுக்கரசு நாயனாருக்கு சமணர்கள் செய்த கொடுமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
III. திருஞான சம்பந்தர் செய்த அற்புதங்களையும் அதன் போது பாடிய பதிகங்களையும் குறிப்பிட்டு விளக்குக.

(புள்ளி 2+3+5=10)

5) திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்களன்றி யொருமலத்தாராயுமுளர்.

I. ஆன்மாக்களின் இயல்புகள் இரண்டு தருக.

II. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?

III. மூவகை ஆன்மாக்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

6) “பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை

மா வாழ் அகலத்து மால் முதல் வானவர்

ஓவாது வவரும் நிறைந்து உறைந்துள்ளது.

தேவாசிரியன் எனும் திருக்காவனம்”

I. மேலுள்ள பாடல் இடம் பெற்ற நூல் யாது அதன் ஆசிரியர் யார்?

II. பூவார் திசைமுகன் மாவால் அகலத்து என சிறப்பிக்கப்பட்டவர்கள் யாவர்?

III. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.

(புள்ளி 2+3+5=10)

7) கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. வேதங்கள்
2. சுவாமி விபுலானந்தர்
3. மெய்கண்ட தேவர்

(புள்ளி 2x5=10